இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை

முன்னிலை: திரு.இரா.கோபிதாந்

ந.க.எண்: 199/2024/அ4 நாள்:25.07.2024

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அனுமதி

பொருள்:– மனைப்பிரிவு – சிவகங்கை மாவட்டம் – இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சி – சோதுகுடி குரூப் – பூச்சியேந்தல் கிராமத்தில் – சர்வே எண்.378/5ல் மற்றும் 378/6ல் அமைந்துள்ள 5520 சதுர மீட்டர் உள்ள பரப்பளவு உள்ள மனைபிரிவு – நகர் ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது – வரன்முறைப்படுத்தி – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – சார்பு

பார்வை:–

1. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(3)) துறை அரசாணை (நிலை) எண்.78, நாள்.04.05.2017.
2. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை அரசாணை (நிலை) எண்.172, நாள்.13.10.2017.
3. அரசாணை (நிலை) எண்.94 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 16.03.2024
   நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (மு.கூ.பொ.) சிவகங்கை மாவட்டம்
4. அவர்களின் தொழில்நுட்ப அனுமதி உத்தரவு ந.க.எண். SWP.KNFXHPKS/2024/TCP நாள்: 27/04/2024
5. திரு.செ.செல்வராஜ், த/பெசென்னியப்பன், கதவு எண்.46/128, நெல்மண்டி தெரு, சிவகங்கை அவர்களின் விண்ணப்பம் நாள் 06,06,2024.
6. பேரூராட்சி மன்ற தீர்மான எண் 35 /2024, நாள் 13.06.2024
7. இவ்வலுவலக அறிவிப்பு நாள்.25.03.2024

****

ஆணை:–

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தேர்வுநிலைப் பேரூராட்சி, சோதுகுடி குரூப் , பூச்சியேந்தல் கிராமத்தில் , சர்வே எண்.378/5ல் மற்றும் 378/6ல் அமைந்துள்ள 5520 சதுர மீட்டர் உள்ள பரப்பளவு உள்ள மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது வரன்முறைப்படுத்துவதற்கு பார்வை 4–ல் கண்ட விபரப்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பார்வை 6–ல் கண்டபடி பேரூராட்சி மன்ற தீர்மானம் மற்றும் பார்வை 7–ன் படி மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கிட கட்டண அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. கீழ்கண்ட விவரப்படி மனுதாரரால் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வே எண்.	மனை எண்ணிக்கை சதுர மீட்டர்	வரன்முறைக் கட்டணம் செலுத்திய விவரம்.	அபிவிருத்திக் கட்டணம் செலுத்திய விவரம்.	கூராய்வுக் கட்டணம்	நிலபயன் மாற்று கட்டணம்
சர்வே எண்.378/5ல் மற்றும் 378/6ல்	21 எண்ணம் 5520 சமீ	ரூ.289800/–, E- Challan (20240723010277) Date: 23/07/2024	ரூ.414000/- State Bank of India DDNo. 322041 Dated: 24.07.2024	21000/– State Bank of India DDNo. 322038 Dated: 24.07.2024	3480/– State Bank of India DDNo. 322037 Dated: 24.07.2024

எனவே, மனுதாரரால் அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து சோதுகுடி குரூப் , பூச்சியேந்தல் கிராமத்தில் , சர்வே எண்.378/5ல் மற்றும் 378/6ல் அமைந்துள்ள 5520 சதுர மீட்டர் உள்ள பரப்பளவு உள்ள 21எண்ணம் மனைகளுக்கு மனை இடத்தை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப் பிரிவிற்கு வழங்கப்படும் இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
2. மேலும் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு உண்டான இடங்கள் அல்லது பூங்கா ஒதுக்கீடுக்கென ஒப்படைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக சர்ச்சைகள் ஏதும் ஏற்படின் தாங்களே முன் நின்று நிவர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி தன்னியல்பாகவே ரத்து செய்யப்படும்.
3. விற்பனை செய்யப்படாத பிளாட்களுக்கு மனை ஒப்புதல் வழங்கி மட்டுமே இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இம்மனைகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு தனியாக விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
4. மேலும் மேற்படி மனைகளுக்கு பார்வை 1ல் காணும் உத்தரவு மற்றும் ஒப்புதல் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

செயல் அலுவலர்,
தேர்வுநிலை பேரூராட்சி,
இளையான்குடி.

பெறுநர்:
திரு.செ.செல்வராஜ்,
த/பெ.சென்னியப்பன்,
கதவு எண்.46/128, நெல்மண்டி தெரு,
சிவகங்கை ,
சிவகங்கை மாவட்டம்.

நகல் – நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், சிவகங்கை.
நகல் – சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், இளையான்குடி.
நகல் – வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், இளையான்குடி.
நகல் – பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை மண்டல